# Sharia Laws in respect of "Murthath" (one who deserted Islam) issued by the All Ceylon Jamiathul Ulama

In a meeting convened on 05/11/1991 at the upper floor of the "Masjithun Noor" comprising of Trustees of all Mosques, Members of Citizen's Committees, Grama Sevaka Officers, Dignitaries, Ulama Council Members, after the demise of the"Murthath" recently, it was decided to remind the public and to strictly enforce the Sharia Laws issued by the All Ceylon Jamiathul Ulama.

> "And if any of you turned back from his faith and die in unbelief their works will bear no fruit in this life and the hereafter; they will be companions of fire and will abide therein."(Quran 2:217)

**Request a "Murthath" to repent (Thowba) if accepted he should pronounce Kalimah "Sahathath" in public and rejoin Islam and adhere to the laws of Islam.**

**The following laws should be enforced upon a "Murthath" if he refuses to repent (Thowba)":-**

01. Death penalty would be executed on him in a country ruled by Islam
02. It is prohibited to perform cleaning rituals, covering the body with clothes and Janaza prayers, to bury him in a Muslim cemetery in case of his death
03. No one can claim inheritance of his wealth and property
04. All his wealth and property will be entrusted to "Baithunmal- the Public Trust"
05. The marriage contract of a widow who has not followed her husband and is a Muslim it will be nullified.
06. It is prohibited to say Salam or say prayers (Dhuwa) on him.
07. Their witness will not be accepted.
08. They cannot be a "Wali" (the one who takes responsibility) in the case of a marriage.
09. Muslims should not consume the meat slaughtered by them.
10. Should not see or inquire after his health if he falls sick
11. It is prohibited for Muslims to participate in any special celebrations or partake in the meals provided by them.
12. It is prohibited to have any business dealings with them.
13. It is prohibited to include them in the Mosque Administration or Muslim Jamath (Associations)
14. Should deal with them severely and vehemently than dealing with "Kafir" (Non-Muslims) because of the reason the Kafir who embrace Islam proclaiming the Kalimah "La Ilahu Ill Allah" has no obligation to repeat (Kalah) the compulsory or obligatory rituals that he has failed to perform, but the "Murthath" who proclaim again the Kalimah "La Ilahu Ill Allah" and embrace Islam should repeat them all.
15. Non-Muslims can inhabit in Muslim dominated places but Muslims should avoid living with "Murthath" or having any relationship with them.

There are many more laws in Islam with regard to this "Murthath". If this "Murthath" fail to embrace Islam again, although enough time has been extended to them for repentance, the Trustees of the Mosque and the Muslim General public are hereby requested to implement the above Islamic laws without delay.

**Council of Jamiathul Ulama**
**Maruthamunai**

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையால் வெளியிடப் பட்ட இஸ்லாத்தை விட்டு மாறியவர் (முர்தத்) களுக்கான ஷரீஅத் சட்டங்கள்

1991. 11. 05 ம் திகதி 'மஸ்ஜிதுன் நூர்' மேல் மாடியில் அனைத்து பள்ளிவாசல் நிர்வாகிகளும், பிரஜைகள் குழு உறுப்பினர்களும், கிராம சேவை உத்தியோகத்தர்களும், பிரமுகர்களும், உலமா சபையினரும், அண்மையில் இறந்த 'முர்தத்' தின் மரணச் சடங்கைத் தொடர்ந்து ஊரில் ஏற்பட்ட பிரச்சினை சம் தொடர்பாக கூடிய கூட்டத்தில், பொது மக்களுக்கு முர்தத்துக்கான அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையினால் அளிக்கப்பட்ட ஷரீஅத் சட்டத்தை மீண்டும் ஞாபகமூட்டுவதெனவும், உறுதியாக நடைமுறைப் படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

''உங்களில் எவரேனும் தன்னுடைய மார்க்கத்தை (இஸ்லாமை) விட்டு மாறி (முர்த்தத்தாக) நிராகரித்தவராக இறந்து விட்டால், இத்தகையோருடைய அமல்கள், நற்செயல்கள் எல்லாம் இம்மையிலும் மறுமையிலும் அழிந்து விடும். இவர்கள்தான் நரக வாசிகள். என்றென்றும் அதில் தங்கி விடுவார்கள்'' (2:217)

முர்தத் ஆனவனிடம் 'தௌபா' செய்து மீளும்படி வேண்டுதல், தௌபாவை ஏற்றுக் கொண்டால் ''ஷஹாதத்'' கலிமாவை பகிரங்கமாகக் கூறி, மீண்டும் இஸ்லாத்தில் இணைவதோடு, இஸ்லாத்தின் சட்ட திட்டங்களையும் ஏற்று ஒழுகுதல் வேண்டும்.

ர்தத் ஆனவர் தௌபா செய்ய மறுக்கும் சந்தர்ப்பங்களில் பின்வரும் சட்டங்கள் அவர்மீது நிறைவேற்றப்படும்.

1. இஸ்லாமிய ஆட்சியின் கீழுள்ள நாடுகளில் இவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்படும்.
02. இவர் மரணித்தால் குளிப்பாட்டுதல், கபனிடுதல், ஜனாஸாத் தொழுகை நடாத்துதல், முஸ்லிம் மையவாடியில் அடக்குதல் கூடாது.
03. முர்தத்தின் சொத்துக்களுக்கு யாரும் வாரிசு உரிமை பெற முடியாது.
04. சொத்துக்கள் பைத்துல்மால் பொது நிதியத்தில் பொறுப்பாக்கப்படும்.
05. முர்தத்தின் மனைவி அவரைப் பின்பற்றாது, முஸ்லிமாக இருந்தால், அவரின் திருமண ஒப்பந்தம் தானாக நீங்கி விடும்.
06. முர்தத்தின் மீது 'துஆ' பிரார்த்தனை செய்வதோ, அவர்களுக்கு ஸலாம் கூறுவதோ கூடாது.
07. இவர்களின் சாட்சியங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
08. முர்தத்துகள் வலிகாரர்களாக இருக்கவோ, செயல்படவோ முடியாது.
09. இவர்களால் அறுக்கப்பட்ட பிராணிகளை முஸ்லிம்கள் புசித்தலாகாது.
10. முர்தத்துகள் நோய்வாய்ப் பட்டிருந்தால் நலம் விசாரித்தல் கூடாது.
11. இவர்களது இல்லங்களில் நடை பெறும் விருந்துபசாரங்கள், மற்றும் விஷேட வைபவங்களில் முஸ்லிம்கள் கலந்து கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.
12. முர்தத்துகளுடன் வியாபாரம், மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.
13. முர்தத்துகளை, முஸ்லிம்கள் ஜமாஅத்தில் சேர்த்துக் கொள்ளலும், மஸ்ஜிதுகளின் பரிபாலனங்களில் சேர்த்துக் கொள்ளலும் கூடாது.
14. காபிர்களுடன் நடந்து கொள்வதைப் பார்க்கிலும், இவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில், காபிர்கள் புதிதாக இஸ்லாத்திற்கு வந்து, 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவைச் சொன்னால், அவர்கள் அதற்கு முன் செய்யத் தவறிய பர்ழான அமல்கள், கடமைகள் எதனையும் (களாஉ) மீட்டி செய்யத் தேவையில்லை. ஆனால் (முர்தத்) இஸ்லாத்தை விட்டு விலகியவர்கள் திரும்பவும் 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற கலிமாவைச் சொல்லி பாவமன்னிப்பு தேடினால் அதற்கு முன் அவர்கள் செய்யாத பர்ழான அமல்களை (கடமை) எல்லாம் (களாஉ) மீட்டி செய்தல் வேண்டும்.
15. முஸ்லிம் ஊர்களில் அந்நிய மதத்தவர்கள் குடியிருக்கலாம். ஆனால் முர்தத்துகளுடன் முஸ்லிம்கள் கலந்து வாழ்வதோ, பரஸ்பர உறவுகள் வைத்துக் கொள்வதோ தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவை போன்ற இன்னும் பல சட்டங்கள் இஸ்லாத்தை விட்டு விலகியவர் (முர்தத்) களுக்கு மார்க்கத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு போதிய அவகாசங்கள் பாவமன்னிப்புக்காக கொடுத்திருந்தும் இவர்கள் இஸ்லாத்தில் நுழையவில்லையென்றால் இவர்களுக்கு பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்களும் முஸ்லிம் பொது மக்களும் மேலும் காலம் தாழ்த்தாது கண்டிப்பாக மேற் கூறப்பட்ட மார்க்கச் சட்டங்களை நடைமுறைப் படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஜம்இய்யத்துல் உலமா சபை
மருதமுனை.

குறிப்பு :
இத் துண்டுப் பிரசுரம் கிடைத்த பின்னர் முர்தத் என தீர்ப்பளிக்கப்பட்டவர்களோ அல்லது அவர்களைச்